بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**பைத்துல் மஸ்ரூர் பள்ளிவாசல், பிரிஸ்பேன், ஆஸ்திரேலியா**

**தமிழாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் சாஹிப்**

October 25
2013

## பள்ளிவாசல் கட்டுவதும் நமது பொறுப்புகளும்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் அஃராஃபின் 30 மற்றும் 32வது வசனங்களை ஓதினார்கள்:**

قُلْ أَمَرَ رَبِّيْ بِالْقِسْطِ ۗ وَأَقِيْمُوْا وُجُوْهَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ وَّادْعُوْهُ
مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ ۚ كَمَا بَدَأَكُمْ تَعُوْدُوْنَ

இந்த வசனங்களின் பொருள்: *நீர் கூறுவீராக! என் இறைவன் எனக்கு நீதியைக் (கடைபிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும் நீங்கள் வணக்கத்தலம் ஒவ்வொன்றிலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காகக் களங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். அவன் உங்களைத் தோற்றுவித்தது போல், நீங்கள் (அவனிடமே) மரணித்த பிறகும் திரும்புவீர்கள். (7:30)*

يٰبَنِيْٓ اٰدَمَ خُذُوْا زِيْنَتَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ وَّكُلُوْا وَاشْرَبُوْا وَلَا تُسْرِفُوْا ۚ إِنَّهُ لَا يُحِبُّ
الْمُسْرِفِيْنَ

*ஆதமின் மக்களே! ஒவ்வொரு வணக்கத்தலத்திடத்தும் நீங்கள் உங்கள் அழகை மேற்கொள்ளுங்கள். உண்ணுங்கள்; பருகுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனென்றால் அவன் வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (7:32)*

அல்லாஹ் தனது அருளினால் பிரிஸ்பேன் அஹ்மதிகளுக்கு அல்லது ஆஸ்திரேலியாவின் அஹ்மதிகளுக்கும் இங்கு இந்த ஊரில் ஒரு நிலையான பள்ளிவாசல் கட்டுவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் இந்த கருணைக்கு எந்த அளவு நன்றி செலுத்தினாலும் அது குறைவேயாகும். ஏறக்குறைய பதினைந்து வருடத்திற்கு முன்பாக நீங்கள் இந்த இடத்தை விலைக்கு வாங்கினீர்கள். அப்போது இதில் ஒரு மிசன் ஹவுஸும் ஒரு ஹாலும் கட்டப்பட்டது. அதில் நீங்கள் தொழுதும் வந்தீர்கள். பிறகு 2006ல் முதன் முறையாக நான் இங்கு வந்தபோது, இந்த கட்டிடங்கள் இருந்த போதும் கூட தற்போது பள்ளிவாசல் கட்டப்பட்ட பிறகு தென்படக்கூடிய பொலிவு அப்போது தென்படவில்லை. இது அல்லாஹ் ஜமாஅத்தின் மீது செய்துள்ள மாபெரும் கருணையாகும். அதாவது ஜமாஅத் மற்றும் கிலாஃபத்திற்கிடையில் உலகில் வேறெங்கும் தென்படாத ஒரு பந்தத்தை அவன் உருவாக்கியுள்ளான்.

இது உண்மையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தினரிடம் நிலைபெறச் செய்ய வழங்கிய அந்த போதனைகள் மற்றும் உடன்படிக்கையின் விளைவே ஆகும். அன்பு, சகோதரத்துவம் மற்றும் கட்டுப்படுதலுக்கான இந்த தொடர்பை, பந்தத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பைஅத் நிபந்தனைகளில் எடுத்துரைத்துள்ளார்கள். இந்த அன்பு, சகோதரத்துவம் மற்றும் கட்டுப்படுதலுக்கான பந்தம் அன்னாருக்குப் பிறகு, தொடர்ந்து நிலைபெற்றிருக்கும் கிலாஃபத் அமைப்புடன் தொடர்கிறது.

இந்தப் பள்ளிவாசல் கட்டுவதும், பள்ளிவாசல்கள் நமது தேவை என்பதை விட ஜமாஅத் அதிகமாகப் பரவும் போது இன்சா அல்லாஹ் பள்ளிவாசல்களும் அதிகமாகக் கட்டப்படும். ஆனால் நான் இங்கு கிலாஃபத்தைப் பற்றிக்

கூறினேன். காலத்தின் கலீஃபாவின் கூற்றிற்கு லெப்பைக் என்று கூறியதனாலும் உலகில் பள்ளிவாசல் கட்டப்படுகின்றன. பொதுவாக உலகில் ஒவ்வொரு இடங்களிலும் பள்ளிவாசல்கள் கட்டுங்கள் என கவனமூட்டுகின்றேன். ஏனென்றால் இது தப்லீகிற்கான வழியாகும். உண்மையில் இந்த விசயம் உண்மையாகவும் நிரூபணமாகிறது.

நான் கூறியது போன்று நான் இங்கு 2006 –ல் வந்தேன். அப்போது இங்கு ஜமாஅத் சென்டர் ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால் பள்ளிவாசலின் தோற்றத்தில் இங்கு ஒரு பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும் என்றும் கூறினேன். அதற்கு ஜமாஅத்தினர்கள் லெப்பைக் எனக் கூறினர். அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசலையும் கட்டியுள்ளனர். உள்ளூர் மக்களால் உங்களுக்கு பள்ளிவாசல் கட்டுவது தொடர்பாக சந்திக்க நேரிட்ட பல்வேறு தடைகள் மற்றும் இடையூறுகள் மூலம் உள்ளூர்வாசிகளிடம் பள்ளிவாசல் தொடர்பான எண்ணங்கள் எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பது உங்களால் கவனிக்க முடியும்.

இங்கு சென்டரும் நிலைபெற்றிருந்தது. மக்கள் தொழுவதற்காக வந்தார்கள். ஏனைய ஜமாஅத்தின் செயல்பாடுகளும் நடைபெற்றிருக்கும். ஆனால் பள்ளிவாசல் கட்டுவதற்கான திட்டம் தீட்டப்பட்டு அனுமதிக்காக கடிதம் கொடுக்கப்பட்ட போது, அண்டை அயலார்கள் அதனை எதிர்த்தனர். இறுதியில் அல்லாஹ் அருள் புரிந்தான். எனக்கு கிடைத்த அறிக்கையின்படி 8, 9 மாத முயற்சிக்குப் பிறகு கவுன்சில் தரப்பிலிருந்து அனுமதி கிடைத்தது. இந்த வகையில் டிசம்பர் 2012 –ற்குப் பிறகு குவின்ஸ்லாந்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் பள்ளிவாசல் கட்டுவது ஆரம்பிக்கப்பட்டது. இன்று அல்லாஹ்வின் அருளால் உங்களிடம் இந்த அழகிய பள்ளிவாசலும் உள்ளது.

இந்தப் பள்ளிவாசல் கட்டுவதிலும் முந்தைய கட்டிடங்களைச் சரிசெய்வதிலும் என்னிடம் வந்துள்ள அறிக்கையின்படி 4½ மில்லியன் டாலர் செலவழிக்கப்பட்டுள்ளது. ஜமாஅத் உறுப்பினர்களும் மனம்திறந்து தியாகங்களைச் செய்துள்ளனர். ஒரு சகோதரர் ஒரு இலட்சத்து இருப்பத்தி ஐந்தாயிரம் டாலர் கொடுத்துள்ளார் என்றும், இன்னொருவர் ஒரு இலட்சம் டாலர் கொடுத்துள்ளார் என்றும் என்னிடம் கூறினார்கள். மேலும் ஜமாஅத்தினர் ஒவ்வொருவரும் தனது தகுதிக்கேற்ப தியாகங்களைச் செய்துள்ளனர். மேலும் தகுதியை விட அதிகமாக தியாகம் செய்துள்ளனர். அஹ்மதிய்யா ஜமாஅத் பெண்களின் வழக்கத்திற்கேற்ப இங்குள்ள பெண்களும் தமது அணிகலன்களைப் பள்ளிவாசல் கட்டுவதற்காகக் கொடுத்துள்ளனர்.

அல்லாஹ் தியாகங்கள் செய்யக்கூடிய இந்த அனைவருக்கும் அளவின்றி வழங்குவானாக! இவர்களது உயிர்களிலும் செல்வங்களிலும் அருள்களை வழங்குவானாக! ஆனால் நாம் இதனை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். அதாவது இந்த தியாகங்கள், இந்த அன்பு மற்றும் பற்றுணர்வுக்கான ஆன்மா – இந்த கட்டுப்படுதலுக்கான முன்மாதிரி ஓர் அஹ்மதியிடம் ஏதோவொரு நேரத்தில் மட்டும் ஏற்படுவதில்லை. அவ்வாறு ஏற்படவும் கூடாது. மாறாக எப்போதும் தொடர்ந்திருக்கும் முன்மாதிரியின் உணர்வுதான் ஏற்பட வேண்டும். மேலும் இவை தமக்குள் மட்டும் வைத்திருக்க வேண்டிய உணர்வு அல்ல. மாறாக தமது பிள்ளைகளிடமும் சந்ததிகளிடமும் ஏற்படுத்த வேண்டிய உணர்வுகள் ஆகும். இதுதான் ஓர் உண்மையான அஹ்மதியின் ஆன்மாவாக இருக்க வேண்டும்.

இந்த உணர்வுகள் எப்போதும் தொடரும்போது தான், நாம் இறைவனது கட்டளைகளின்பால் கவனம் செலுத்தும் போதுதான், நாம் நமது இறைவனுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்தும் போதுதான், நாம் பள்ளிவாசலுக்கான உரிமையைச் செலுத்தும் போதுதான் ஏற்படுவது சாத்தியமாகும். நாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மையான அடியாருடன் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றும் போதுதான் தொடரும். ஆக நாம் இந்த விசயங்களின் பால் கவனம் செலுத்தும் போதுதான் இவற்றை எப்போதும் நம் கண் முன்னால் வைக்கும் போதுதான் நாம் இந்த பள்ளிவாசலின் உரிமையை நிறைவேற்றியவர்களாக ஆக முடியும்.

இன்று அல்லாஹ்வின் கட்டளைகளில் சிலவற்றை நான் உங்கள் முன் எடுத்துரைப்பேன். இதன் மூலம் நாமும் நமது சந்ததிகளும் இந்த உரிமைகளை நிறைவேற்றுபவர்களாகத் திகழ்ந்து கொண்டே செல்ல வேண்டும்.

நான் ஆரம்பத்தில் ஓதிய வசனம் அதிகாரம் அல் அஃராஃபின் 30 மற்றும் 32 ஆகிய வசனங்கள் ஆகும். இது பள்ளிவாசல் தொடர்பானதாகும். இதில் அல்லாஹ் நம்பிக்கையாளரிடம் ஒரு சில எதிர்பார்ப்புகளை வைத்துள்ளான். அதாவது பள்ளிவாசலுடன் தொடர்புடைய, உண்மையான இறைவணக்கம் செய்பவர் இந்த விசயங்களைக் கவனத்தில் கொண்டால் அல்லாஹ்வுடைய அன்பின் பார்வை அவர்கள் மீது படும்.

முதல் விசயமாக அல்லாஹ் நீதியைக் கடைபிடிக்குமாறு கூறுகின்றான். நீதி எப்படிப்பட்டதென்றால் சமுதாயத்தின் அடிப்படை அங்கமாகிய வீட்டிலிருந்து தொடங்கி உலளாவிய பிரச்சனை வரை இதை கடைபிடிப்பது மிகவும் அவசியமாகும். இது நிலைபெற்றால் தான் உலகில் அமைதியும், சாந்தியும் எல்லா மட்டத்திலும் நிலைபெற முடியும். நீதியின் உரிமைகளை நிறைவேற்றாத காரணத்தால் உலகில் கிளர்ச்சியும், குழப்பமும் ஏற்பட சாத்தியமுண்டு. மேலும்

நீதியியைக் கடைபிடிப்பது என்பது சமூகப் பிரச்சனை மட்டும் அல்ல. அடியார்களுடன் தொடர்புடையது மட்டுமல்ல. மாறாக அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதிலும் கடைபிடிக்க வேண்டும். இபாதத்துகளின் கட்டளைக்கேற்ப இபாதத்துகளை நிறைவேற்றுவது கிலாஃபத்துடன் உள்ள நீதியாகும். மேலும் இந்த நீதியை நிலைநாட்டுவதன் மூலம் கிடைக்கும் நன்மை இபாதத் செய்பவர்களுக்கே உரியதாகும்.

ஆக ஒவ்வொரு உண்மையான மூஃமினும் இபாதத்துகள் செய்வதற்கான உரிமையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த உரிமை, நீங்கள் அனைவரும் ஐவேளை தொழுகைகளைப் பேணும் போதுதான் நடைபெறும். தொழுகையை நிலைநாட்டுவதன் பக்கம் கவனம் ஏற்படும் போதுதான் நடைபெறும். இந்த தொழுகையுடன் தமக்குள் ஒரு தூய மாற்றம் ஏற்படும் போதுதான் நடைபெறும். தொழுகைகளுடன் அல்லாஹ்வின் படைப்பினங்களின் உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்யும் போதுதான் நடைபெறும். படைப்பினங்களுக்குரிய உரிமைகள், உதாரணமாக கணவனுக்கு மனைவிக்குரிய உரிமையை நிறைபேற்ற கட்டளை உள்ளது. அவளது தேவைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடன் மென்மையுடனும், எளிமையுடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர்களது இரத்த உறவுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மனைவியின் தாய், தந்தை, சகோதர, சகோதரி மற்றும் ஏனைய உறவினர்களுக்கு கண்ணியமளிக்க வேண்டும். மனைவியின் செல்வம் மீதும் அவர்களது வருமானத்தின் மீதும் பார்வையைச் செலுத்தக் கூடாது. பிள்ளைகளின் உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். அவர்களது கல்வி மற்றும் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இதில் நமது முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் மார்க்கத்தின் முக்கியத்துவத்தை உணர வைக்க வேண்டும். மார்க்கத்துடன் ஒன்றியிருக்க வேண்டும். எப்போதும் இதனை நினைவில் கொள்ளுங்கள். பிள்ளைகள் குறிப்பாக 13,14 வயது இருக்கும் போது அவர்கள் தமது தந்தை மார்க்கத்திற்கு கண்ணியம் அளிப்பவரா? அவர் இபாதத்துகளைப் பாதுகாப்பவரா? தொழுகையைப் பேணுபவரா? திருக்குர்ஆன் ஓதுவதை வழக்கமாகக் கொண்டவரா? எனப் பார்ப்பார்கள்.

பொதுவாக நான் பார்த்திருக்கின்றேன். தாய்க்கு தம் பிள்ளைகளின் மார்க்க நிலையைப் பற்றிய கவலை இருக்கும். அல்லது குறைந்தபட்சம் என்னிடம் அதனை தெரியப்படுத்துகின்றனர். துஆ செய்யுமாறு கூறுகின்றனர். இதைப்போன்று ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு மனைவியும் தம் பொறுப்புகளை நிறைவேற்ற நீதியினைக் கடைபிடிக்க வேண்டும். உங்களது வீட்டின் கடமைகளை நிறைவேற்றுங்கள். ஒரு பெண்ணிற்கு முதல் பொறுப்பு தனது வீட்டின் பொறுப்பாகும். அதை கவனித்துக் கொள்வதாகும். உங்களுடைய பொறுப்புகளை உணருங்கள். கணவனுக்குரிய கண்ணியத்துடன் அவரது இரத்த உறவுகளுக்கும் கண்ணியம் அளியுங்கள். பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்குங்கள். அவர்களைக் கண்காணியுங்கள்.

தற்போதைய சூழலில் பிள்ளைகளின் தர்பிய்யத் குறித்து தாய், தந்தையருக்கு அதிக கவலை இருக்க வேண்டும். மேலும் கவனம் செலுத்துவதும் அவசியமானதாகும். இந்த மார்க்கப் பயிற்சி கொடுப்பது தாய், தந்தை ஆகிய இருவர் மீதும் பொறுப்பாகும். பிள்ளைகளுக்கு நீங்கள் அஹ்மதி முஸ்லிம் ஆவீர்கள் என்பதை உணர்த்துவது அவசியமாகும். இதற்கு முதலில் தன்னை ஓர் அஹ்மதி முஸ்லிமாக நிரூபித்துக் காட்ட வேண்டும். உன் மீது என்ன பொறுப்பு உள்ளது என்பதை எடுத்துரைப்பது அவசியமானதாகும். முதலில் தாய், தந்தையர் தமது பொறுப்புகளைப் புரிய வேண்டும். பிள்ளைகளிடம், உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்க வேண்டும் எனக் கூற வேண்டும். பிள்ளைகளுக்கு இந்த வகையில் தர்பிய்யத் வழங்கினால் தான் பிள்ளைகள் மார்க்கத்துடன் ஒன்றியிருப்பார்கள். இந்த விசயம்தான் பிள்ளைகளின் உரிமைகளை நீதியுடன் நிறைவேற்றுவதாக ஆக்குகின்றது.

தாய், தந்தையர் ஆகிய இருவரும் முன்மாதிரியை நிலைநாட்ட வில்லை என்றால், பிள்ளைகளின் தர்பிய்யத்தின் பால் கவனம் இல்லையென்றால், பிறகு அவர்கள் நீதியைக் கடைபிடிக்கவில்லை என்பதாகும். பிறகு சமூகத்தில் பொதுவான தொடர்புகள் இருக்கின்றன. இங்கும் தன்னை மூஃமின்களில் இணைத்துக் கொள்ளக்கூடிய, இணைய விரும்பக்கூடிய ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும் ஒருவர் மற்றவரது உரிமையை நிறைவேற்றுவது கடமையாகும். வியாபாரப் பிரச்சனையாக அல்லது வேறெந்தப் பிரச்சனையாக இருந்தாலும் சரி, நீதி மற்றும் நேர்மையைக் கடைபிடிப்பது அவசியமாகும். அல்லாஹ் மூஃமின்களின் ஜமாஅத்தை ஒரே உருவமாக ஆக்கியிருக்கின்றான். அதன் தரம் மற்றவர்களது துன்பத்தை உணரும் போதுதான் நிலைபெறும். அவர்களது உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் ஏற்படும் போதுதான் நிலைபெறும். நீதியை நிலைநாட்டும் போதுதான் நிலைபெறும். எவ்வாறு உடலின் ஏதாவது ஒரு பகுதியில் வேதனை ஏற்பட்டால் உடல் முழுவதும் அந்த வேதனையை உணருவோமா அதை போன்று மற்றவர்களது கஷ்டங்களை உணர வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றவர்களது கஷ்டங்களை உணருங்கள் எனக் கூறியுள்ளார்கள். நாம் உலகிற்கு நீதி எவ்வாறு நிலைபெறும். நீதி இவ்வாறு நிலைபெற வேண்டும். இஸ்லாம் நீதியை

நிலைநாட்ட என்ன வழிமுறைகளைக் கூறுகிறது எனக் கூறும்போது, உலகவாதிகள் இதனைக் கேட்டு நல்ல தாக்கத்திற்கு ஆளாகின்றனர். எனவே நாம் இதற்கான நல்ல முன்னுதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும்.

நேற்று முன் தினம் இந்த பள்ளிவாசல் திறப்பு விழா நடைபெற்றது. அதில் ஜமாஅத்தைச் சேராத நபர்களும், ஆஸ்திரேலியவாசிகளும் கலந்து கொண்டனர். அவர்களிடம் நான் எடுத்துரைத்த விசயங்கள் இவற்றைப் பற்றியே இருந்தது. மனிதனுடைய உரிமைகளை நிறைவேற்றுவதில் நீதி இல்லையென்றால், இதனைப் பற்றி அடிப்படையிலிருந்து உணரவில்லை என்றால், இந்த விசயங்கள் ஒன்றுமற்றவையாகும். பலன் தரக்கூடியதல்ல. உரிமை நிறைவேற்றப்படுகிறது என்றால் அல்லாஹ்வின் அடியார்களது உரிமைகளை நிறைவேற்றக்கூடிய ஒவ்வொரு செயலும் இபாதத்தாக ஆகி விடுகிறது.

இது அல்லாஹ்வின் முன் குனியக்கூடிய இபாதத்தின் அழகை இன்னும் மெருகூட்டுகிறது. ஆக தொழுகையை மிகவும் முக்கியமானதாகக் கருதக்கூடிய முஸ்லிம், இபாதத்துகளை முக்கியமாகக் கருதக்கூடிய முஸ்லிம் நான் அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் நீதியுடன் நடக்க வேண்டும் என்ற சிந்தனையில் எப்போதும் இருப்பார். ஓர் அஹ்மதி இந்த ஹிக்மத் ஆன விசயத்தை மற்றவர்களை விட நன்றாகப் புரிய முடியும். அதை அறிந்தும் வைத்திருப்பார். ஏனென்றால் அவர் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளார். காலத்தின் இமாமின் பைஅத்தின் கீழ் வந்துள்ளார். இதன் மூலம் அல்லாஹ்வின் அருளைப் பெற வேண்டும். இதன் மூலம் அல்லாஹ்வின் இபாதத்திற்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும். இதன் மூலம் தான் படைக்கப்பட்டதன் நோக்கத்தை அறிய வேண்டும் என விரும்புகின்றார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மனிதனின் மீது இரக்கம் காட்டுவது, அவனுடன் அனுதாபத்துடன் நடப்பது மிகப்பெரிய இபாதத் ஆகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு இது சிறந்தவொரு வழியாகும்.

இது ஓர் அழகிய போதனையாகும். இது நீதியை நிலைநாட்டும் அதே வேளையில் இறைவனது நெருக்கத்தையும் பெற்றுத் தருகிறது. மனிதன் படைப்பினங்களின் உரிமைகளை நிறைவேற்றுவதுடன் அல்லாஹ்வின் உரிமையை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுவதற்காக பள்ளிவாசலுக்குச் செல்லும் போது, பிறகு அவர் அல்லாஹ்வின் அன்பின் அரவணைப்பில் வந்து விடுகிறார். மேலும் இபாதத்திற்கான உண்மையான இன்பமும் அவருக்கு கிடைக்கிறது.

அடுத்து ஒரு மூஃமின் இந்த கட்டளையின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். அதாவது,

(7:30) وَ أَقِيمُوا وُجُوهَكُمْ عِنْدَ كُلِّ مَسْجِدٍ

நீங்கள் பள்ளிவாசல் ஒவ்வொன்றிலும் உங்கள் கவனங்களை அல்லாஹ்வின் பக்கம் வைத்துக் கொள்ளுங்கள். இது அல்லாஹ்வின் அருளைப் பெற்றுத் தரக்கூடியதாக ஆக்கும். மேலும் இது இந்த தரத்தை அடைபவர்களுடன் உங்களையும் இணைக்கும்.

நாம் அறிந்தது போன்றே நமது ஒவ்வொரு முயற்சியிலும் அல்லாஹ்வின் ஒரு செயலும் இருக்கும். நாம் எந்த நன்மையையும் நமது முயற்சியினால் மட்டும் பெற்றுவிட முடியாது. அல்லாஹ்வின் செயல் நமது முயற்சியுடன் இணையவில்லை என்றால் அல்லது இணைந்து நன்மையில் உயர்ந்த விளைவுகளை பெறுபவர்களாக நம்மை ஆக்கவில்லை என்றால் பிறகு அந்த நன்மையை நம்மால் அடைய முடியாது. ஆக நமது நல்ல விருப்பங்கள், நமது ஒவ்வொரு விசயத்திலும் நல்ல செயல்கள் செய்வதற்கான முயற்சி தான் நமது கவனங்களை அல்லாஹ்வின் பால் செலுத்தக்கூடியதாக ஆக்கும். மேலும் அதனுடன் இபாதத்துகள் இருக்கும் போது அல்லாஹ்விடம் உதவி கோரும் போது அல்லாஹ் அதனை ஏற்றுக் கொண்டால் பிறகு அது உண்மையான இபாதத்தாக ஆக்கி விடுகிறது.

மேலும் நாம் وَادْعُوهُ مُخْلِصِينَ لَهُ الدِّينَ என்ற கூட்டத்தினருடன் இணைந்து விடுவோம். அதாவது மார்க்கத்தை அல்லாஹ்வுக்காக கலப்பற்றதாக்கி அழைப்பவர்களுடன் இணைந்து விடுவோம். பிறகு கலப்பற்ற முறையில் அல்லாஹ்வை அழைப்பவர்களுக்கு அல்லாஹ்வின் இந்த பிரகாசமான தூதுச் செய்திக்கான பாதையைக் காண்பிக்கின்றான். أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ அதாவது நான் துஆ செய்பவர் என்னை அழைக்கும்போது அவரது அழைப்பைக் கேட்கிறேன் என்று கூறுகின்றான்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இதுவும் அவசியமாகும். அதாவது மனிதன் தனக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தீமைகளிலிருந்து தவிர்ந்திருக்கவில்லை என்றால், இறைவனால் விதிக்கப்பட்ட எல்லைகளை மீறினால் பிறகு துஆவில் எந்த விளைவும் ஏற்படாது. ஆக கலப்பற்ற முறையில் அல்லாஹ்வை அழைப்பது என்பது மனிதன் அல்லாஹ்வின் எல்லா விதமான எல்லைகளையும் கவனத்தில் கொள்ளும் போது தான் முடியும். இந்த

எல்லைகள் என்னவென்பது நாம் திருக்குர்ஆனை ஓதும் போதுதான் அது தெரிய வரும். அதில் நாம் இறைவனது கட்டளைகளைத் தேடிக் கண்டறிகிறோம். இந்த கட்டளைகள்தான் அந்த எல்லைகள் ஆகும். இதிலிருந்தவாறு தான் மனிதன் இறைவனது நெருக்கத்தைப் பெறுகிறான். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளங்களைப் பார்க்கின்றான்.

**அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:**

ஆதமின் மக்களே! ஒவ்வொரு பள்ளிவாசலிலும் அழகை மேற்கொள்ளுங்கள்.

ஒரு மூஃமினின் அழகு அவரது இறையச்சத்தின் ஆடை ஆகும். இங்கு ஓர் மூஃமினுக்கு நிர்ணயிக்கப்பட்ட அந்த எல்லைகளைக் குறித்து மேலும் விளக்கப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

மனிதனது ஆன்மீகத்தின் அனைத்து அழகும், தக்வாவின் அனைத்து நுட்பமான வழிகளிலும் செல்வதில்தான் உள்ளது. தக்வாவின் நுட்பமான வழிகள், ஆன்மீக அழகின் நுண்ணிய வரைபடமும், அழகிய வடிவமும் ஆகும். இறைவனது அமானத்துகளையும், நம்பிக்கையின் உடன்படிக்கையையும் முடிந்தவரை பேணிப் பாதுகாப்பது, தலை முதல் பாதம் வரையுள்ள ஆற்றல் மற்றும் உறுப்புகளில் வெளிப்படையான கண்கள், காதுகள், கைகள், கால்கள் போன்றவற்றையும் உட்புறமாக உள்ளம் போன்ற ஆற்றல்களும், ஒழுக்கங்களும் இவைகளுக்கு எந்த அளவு ஆற்றல்கள் உள்ளனவோ அவற்றை காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப உபயோகப்படுத்துவது, அனுமதிக்கப்படாத செயல்களிலிருந்து தடுப்பது, அவற்றின் மறைவான தாக்குதல்களிலிருந்து கவனமாக இருப்பது ஆகும். உறுப்புகளின் மறைவான தாக்குதல் என்பது என்ன? அதாவது சய்த்தான் இவற்றை தவறான வகையில் உபயோகப்படுத்துமாறு தூண்டுவான். அதிலிருந்து பாதுகாப்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதனுடன் அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவது போன்றவை மனிதனின் ஆன்மீகத்தில் அனைத்து அழகுடன் தொடர்புடையவற்றைப் பெறுவதற்குரிய வழியாகும்.

இறைவன் திருக்குர்ஆனில் தக்வாவிற்கு *லிபாஸ் - ஆடை* என்று பெயர் சூட்டியுள்ளான். *லிபாஸுத் தக்வா* என்பது திருக்குர்ஆனின் சொல் ஆகும். இது ஆன்மீக அழகு, ஆன்மீகப் பொலிவு ஆகியவை தக்வாவிலிருந்து தான் பிறக்கிறது என்பதை தெரிவிக்கிறது. தக்வா என்பது மனிதன் இறைவனது அனைத்து அமானத்துகளையும் ஈமானின் உடன்படிக்கைகளையும் மேலும் படைப்பினங்களின் அனைத்து அமானத்துகளையும் உடன்படிக்கைகளையும் முடிந்தவரை பேணிப் பாதுகாக்க வேண்டும். அதாவது அதன் நுண்ணிய பகுதிகளையும் கண்காணித்து அதன்படி முடிந்தவரை செயல்பட வேண்டும்.

நான் கூறியது போன்று இந்த மேற்கோளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் தெளிவுபடுத்தி விட்டார்கள். அதாவது முதலில் அமானத்துகளைப் பாதுகாக்க வேண்டும். உடன்படிக்கைகளைப் பாதுகாக்க வேண்டும். ஓர் அஹ்மதியிடம் இறை விருப்பத்திற்காக செய்வேன் என்று உடன்படிக்கை செய்த ஓர் அமானத் உள்ளது. அது உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவதாகும். நாம் இந்த அமானத்தைப் பாதுகாப்பது இதனை செய்து கொண்டே வந்தால் இன்சா அல்லாஹ் நமது இபாதத்துகள் இறைவனது நெருக்கத்தைப் பெற்றுத் தரக்கூடியதாகத் திகழ்ந்து கொண்டே இருக்கும். நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளங்களைக் காணக்கூடியவர்களாக ஆவோம். பிறகு நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான வழியினைத் தேடக் கூடியதாக இருக்கும். நாம் பள்ளிவாசலுக்கு வருவது அல்லாஹ்வுக்காக மட்டுமே இருக்கும்.

பள்ளிவாசல் கட்டப்பட்டதன் பின்னர் மக்களது கவனம் இதன் பக்கம் இருக்கும். அதன் உரிமைகளைச் செலுத்துபவர்களாக நாம் இருப்போம். பள்ளிவாசல் கட்டப்பட்ட பிறகு நாம் பள்ளிவாசல் கட்டி விட்டோம் எனத் திருப்தி அடையாதீர்கள். பள்ளிவாசல் கட்டப்பட்ட பின்னர் உங்களது பொறுப்புகள் இன்னும் அதிகமாகி விட்டது. அல்லாஹ் பள்ளிவாசலுக்கு அதன் அழகுடன் செல்லுங்கள் என்று கூறுகின்றான். அதன் அழகு தக்வா மூலமாக ஜொலிக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோளிலிருந்து தக்வா என்ன என்பதை நான் எடுத்துரைத்தேன். இது அல்லாஹ் மற்றும் அடியார்களின் உரிமையை நிறைவேற்றும் போதுதான் வெளிப்படும். நாம் நமது இபாதத்துகளின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி செய்யும் போதுதான் நமது தொழுகைகளைப் பேணும் போது தான் பள்ளிவாசலின் புனிதத்தன்மையைக் கவனத்தில் கொள்ளும் போது தான் வெளிப்படும்.

பலர் துஆ செய்யுமாறு கூறுகின்றனர். இங்கும் பலர் சந்திப்பின் போது கூறுகின்றார்கள். அவர்களில் சிலரது முகத்திலிருந்து இதனை அவர்கள் ஒரு சடங்காக கூறுகின்றார்கள் என்றும், அவர்கள் கூறும் விசயத்தில் அவர்களே செயல்படுவதில்லை என்பதும் தெரிய வருகின்றது. அவர்களுக்கு அவர்களது துஆவின் பக்கமே கவனமில்லை; தொழுகையின் பக்கமும் கவனமில்லை என்பதும் தெரிய வருகிறது. நான் அவர்களிடம் ஐவேளைத் தொழுகைகளைப் பேணுகின்றீர்களா? எனக் கேட்டால், அவர்கள் ஒளிவுமறைவாகப் பதில் கூறுகின்றார்கள். துஆ செய்யுங்கள் எனக் கூறிவிட்டு, தாம் எதுவும் செய்யாமல் இருப்பது மிகவும் தவறானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கம், இஸ்லாத்தின் மறுமலர்ச்சி ஆகும். புதிய பூமியையும், புதிய வானத்தையும் உண்டாக்குவதாகும். இந்த நோக்கம், நம்மில் ஒவ்வொருவரும் ஆணும், பெண்ணும், இளைஞனும், முதியவரும் தக்வாவின்படி செயல்பட்டு அல்லாஹ்வின் அமானத்துகளின் உரிமைகளை நிறைவேற்றாத வரை உடன்படிக்கையை நிறைவேற்றாத வரை நிறைவேறாது. என்னிடம் துஆ செய்யக் கூறுகின்றீர்கள் என்றால் தானும் துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தமது சஹாபி ஒருவரிடம் இதனைத்தான் கூறினார்கள். அதாவது நீங்கள் உங்களது நோக்கம் நிறைவேற விரும்புகின்றீர்கள் என்றால் என்னிடம் அதற்காக துஆ செய்யுமாறு கூறினால், நீங்களும் உங்களது துஆ மூலம் எனக்கு உதவி செய்யுங்கள். உங்களது செயல்கள் மூலம் எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார்கள்.

இறை ஜமாஅத்தின் உண்மையான நோக்கம் இதுவே ஆகும். அதாவது ஒவ்வொருவரும் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இதனால்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இதனைக் கூறியுள்ளார்கள். இதற்கு முன்பு நான் ஒரு குத்பாவில் இதனை எடுத்துக் கூறியுள்ளேன்.

அதாவது வலி ஆகுங்கள்; வலியை வணங்கக் கூடியவர்களாக ஆகாதீர்கள். பீர் ஆகுங்கள்; பீரை வணங்கக்கூடியவர்களாக ஆகாதீர்கள். அதாவது ஒவ்வொருவரும் இறைவனுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்த வேண்டும். பிறகு மூஃமின்களுடைய ஜமாஅத்தில் துஆக்கள் மூலமாக ஒருவர் மற்றவருக்கு உதவி புரிய வேண்டும். அவர்களது உரிமைகளை வழங்குவதற்காக முயற்சி செய்ய வேண்டும். இபாதத்துகளுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். படைப்பினங்களுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். அந்நியர்களின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு உங்களது ஒழுக்கங்களை மேம்படுத்துங்கள்.

இங்கு இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். பீர் அல்லது வலி ஆக வேண்டும் என்பதன் பொருள், ஒவ்வொருவரும் தனக்கென்று ஓர் அதிகார வட்டத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதல்ல. மாறாக ஒவ்வொருவரும் அல்லாஹ்வுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும். இதுவும் கிலாஃபத்துடன் விசுவாசமான தொடர்பு இருக்கும் போது தான் நடைபெறும். மேலும் ஜமாஅத்துடன் இணைந்திருக்கவும் வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜமாஅத்துடன் இணைந்திருக்கக் கூடிய மக்களின் முன்னேற்றத்தைப் பற்றி தான் முன்னறிவிப்பு செய்திருக்கின்றார்கள். எனவே இந்த விசயத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

நான் கூறியது போன்று, இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டதால் இங்குள்ள அஹ்மதிகளின் பொறுப்பு மேலும் அதிகமாகி விட்டது. அது என்னவென்றால் இந்த பள்ளிவாசலை அவர்கள் நிரப்ப வேண்டும். மேலும் இறைவனது பார்வையில் அழகாக இருக்கக்கூடிய அந்த அழகை இதற்குள் கொண்டு வர வேண்டும். இதுவும் உங்களது பொறுப்பாகும். ஒருவர் மற்றவரது உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். இதுவும் உங்களது பொறுப்பாகும்.

இந்தப் பகுதியில் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். இதுவும் உங்களது பொறுப்பாகும். நீங்கள் இந்த கடமைகளைச் செய்து வந்தால் பிறகு நிச்சயமாக உங்களது பள்ளிவாசல் கட்டுவதற்காக செலவிடப்பட்ட பொருள் தியாகமும், நேரத்தின் தியாகமும் அல்லாஹ்விடம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கையுள்ளது. அல்லாஹ் அவ்வாறே செய்வானாக! மேலும் நீங்கள் அல்லாஹ்வின் அன்பின் பார்வையைப் பார்ப்பவர்களாகி விடுவீர்கள். ஆக இந்த எண்ணத்துடன் பள்ளிவாசலுக்கு வாருங்கள். அதனை நிரப்புங்கள்.

ஒரு ஹதீஸில் வருகிறது. இபாதத் செய்வதற்கான உணர்வுடன் காலையிலும் மாலையிலும் பள்ளிவாசலுக்கு வருபவருக்கு அல்லாஹ் விருந்து உபசரிப்பு செய்கிறான். மேலும் ஒரு தொழுகைக்குப் பிறகு இரண்டாவது தொழுகை வரையுள்ள இடைவெளியில் ஒரு மூஃமின் இறைவன்பால் முழுமையான கவனத்தை வைத்திருந்தால் அவர் எல்லையில் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டைச் செய்பவரைப் போன்றவராவார். அவர் சய்த்தானிடமிருந்து பாதுகாப்பாக இருப்பார். அடுத்த நேரத் தொழுகைக்காகப் பள்ளிவாசலில் நுழையும் போது லிபாஸுத் தக்வா உடன் செல்வார். அது மிகவும் சிறந்த அழகாகும்.

ஆக இந்த தற்காலிக உலகில் இந்தத் தரத்தை நிலைநாட்டுவது ஓர் அஹ்மதியுடைய பொறுப்பாகும். இந்தப் பொறுப்பை நம்மில் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இந்த உண்மையை நாம் புரிந்து கொண்டால், நாம் இபாதத்துகளைப் பாதுகாக்கக் கூடியவர்களாக ஆகிவிடுவோம். மேலும் இறைவனுக்கு விருப்பமான அழகுடன் பள்ளிவாசலுக்கு செல்பவர்களாகி விடுவோம். பிறகு அல்லாஹ்வின் அருள்களை முன்பை விட அதிகமாக பெற்றுக் கொண்டே செல்பவர்களாக ஆகி விடுவோம்.

**இரண்டாவது வசனத்தில் அல்லாஹ் இதனையும் கூறியுள்ளான்:**

كُلُوا وَاشْرَبُوا وَلَا تُسْرِفُوا ۚ إِنَّهُ لَا يُحِبُّ الْمُسْرِفِينَ *அதாவது உண்ணுங்கள்; பருகுங்கள். வரம்பு மீறாதீர்கள். ஏனென்றால் வரம்பு மீறுபவர்களை அல்லாஹ் விரும்புவதில்லை. (7:32)*

இதற்கு சாப்பிடுவதிலும் பருகுவதிலும் நடுநிலையைக் கடைபிடிக்க வேண்டும் என்ற ஒரு பொருளும் உள்ளது. எல்லா வகையிலும் ஹலால் மற்றும் தய்யிப் – தூய்மையான உணவை உண்ண வேண்டும். அதிலும் நடுநிலையைக் கடைபிடிக்க வேண்டும். ஏனென்றால் உணவின் தாக்கம் மனிதனுடைய சிந்தனை மற்றும் உணர்வில் ஏற்படுகிறது. அடுத்து அளவுக்கு அதிகமாக உண்பது மனிதனை சோம்பேறியாகவும் மந்தமானவனாகவும் ஆக்கி விடுகிறது. மனிதன் இரவில் அதிகமாக சாப்பிடுகின்றான். அதன் மூலம் ஆழ்ந்த உரக்கம் வரும். பிறகு ஃபஜ்ர் தொழுகைக்கு எழ முடிவதில்லை.

**பிறகு திருக்குர்ஆனின் மற்றோரிடத்தில் அல்லாஹ் இதனை கூறுகின்றான்:**

மூஃமின் அல்லாதவருடைய அடையாளம் அவர்கள் உண்பது மற்றும் பருகுவதன் பக்கமே கவனம் செலுத்துவர். எவ்வாறென்றால் விலங்குகளைப் போன்று உண்பதும் பருகுவதும் தான் அவர்களது நோக்கமாக இருக்கும். ஆனால் மூஃமினின் நோக்கம் உயர்வானதாகும். அல்லாஹ்வை வணங்குவது தான் அவரது நோக்கமாக இருக்கும்.

அல்லாஹ் அனைத்து வகையான ஹலால் மற்றும் தய்யிப் – தூய்மையானவற்றை மனிதனுடைய நலனுக்காகப் படைத்துள்ளான். ஆனால் உலகத்தைப் பெறுவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளக் கூடாது. அதிலிருந்து கண்டிப்பாக நன்மைகளைப் பெறலாம். ஆனால் அதுவே நோக்கமாக ஆகிவிடக் கூடாது. மாறாக இறை திருப்தியைப் பெறுவதே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். இது உலக நலனை அடைவதற்காக வீண் விரயம் செய்யாத போதுதான் நடைபெறும். தேவையை விட அதிகமாக அவற்றை தலைக்கு மேல் தூக்கி வைக்கக் கூடாது. அளவுக்கு அதிகமாக அவற்றிற்கு முன்னுரிமை தரக்கூடாது. அவற்றை இபாதத்துகளில் தடையை ஏற்படுத்துவதற்குக் காரணமாக ஆக்கி விடக் கூடாது. இந்த உலக விசயங்களில் உண்பதும் பருகுவதும் இபாதத்துகள் செய்வதில் தடையாக அமைந்தால், உலக இன்பங்கள் இபாதத்துகளை விட மேலோங்கி விட்டால் பிறகு இப்படிப்பட்ட எல்லை மீறுவதை அல்லாஹ் விரும்ப மாட்டான். ஆக எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நடுநிலையுடன் ஒவ்வொரு செயலும் இருந்தால் அது அல்லாஹ்வுக்கு பிடித்தமானதாகும்.

உலகில் சம்பாதிப்பதை இறைவன் தடுக்கவில்லை. மாறாக மூஃமின்களுக்கு தமது பணியை மிகவும் கவனத்துடன் செய்ய வேண்டும். அங்கும் நீதியை நிலைநாட்ட வேண்டும் எனக் கூறுகின்றான். உலகை சம்பாதிப்பது மார்க்கத்தை மறப்பதற்கு காரணமாக அமையும் என்றால், தொழுகைகளிலிருந்து கவனத்தை திருப்பக் கூடியதாக அமையும் என்றால் பிறகு இந்த விசயங்கள் மனிதனை இறைவனுடைய அருளிலிருந்து தடுத்து விடுகின்றது.

இறைவன் நம்மில் ஒவ்வொருவரையும் இறைவனிடமிருந்து விலக்கக்கூடிய வீண் விரயத்திலிருந்து பாதுகாப்பானாக! இது அல்லாஹ்வின் கருணை ஆகும். ஜமாஅத்தின் பெரும்பான்மை இந்த பொறுப்புகளைப் புரியக்கூடியதாக உள்ளது. நான் பொருள் தியாகத்தைப் பற்றி கூறினேன். அதிலும் முந்திக் கொண்டு அதிக அளவு தியாகங்கள் செய்யக்கூடியதாக உள்ளது. பொருள் தியாகத்தின் ஆன்மாவை உணரக்கூடியதாக உள்ளது. இவர்கள் தனக்காக மட்டும் செலவழிப்பதில்லை. நான் இதனைப் பற்றி பலமுறை கூறியுள்ளேன். அதாவது பள்ளிவாசலை நிரப்புவதன் பக்கம் இதே உணர்வுடன் தொடர்ந்து செயல்படுவது அவசியமாகும்.

நான் கூறியது போன்று நீங்கள் கட்டிய இந்த பள்ளிவாசல் மிகவும் அழகாக உள்ளது. வெளியில் மினாரா உள்ளது. அது மிகவும் அழகாக தோற்றமளிக்கின்றது. பள்ளிவாசலின் Covered Area –வும் அல்லாஹ்வின் அருளால் மிகப் பெரியதாகும். ஹாலைப் பற்றி நான் ஏற்கனவே கூறிவிட்டேன். இங்கு ஒரு பழைய ஹாலும் உள்ளது. அதனை இவர்கள் மறு சீரமைத்து மிகவும் அழகாக ஆக்கி விட்டார்கள். இந்த ஹாலையும் சேர்த்து இந்த இரண்டு இடங்களிலும் ஏறத்தாழ ஆயிரம் பேர் வரை தொழலாம் எனக் கூறப்படுகிறது. ஆனால் தற்போது நீங்கள் 500, 600 பேர் தான் இருப்பீர்கள். இந்த வகையில் இன்னும் அதிக வாய்ப்பு உள்ளது. உங்களுக்கு இந்தப் பள்ளிவாசல் பெரியதாக தோன்றலாம். இன்று சிட்னி மற்றும் வேறு சில இடங்களிலிருந்தும் சிலர் வந்திருக்கலாம். இதனால் பள்ளிவாசல் நிரம்பி காணப்படுகிறது. இங்குள்ள உள்ளூர்வாசிகள் மட்டும் இருந்தால் ஒருவேளை பள்ளிவாசல் கொஞ்சம் காலியாகத் தென்படலாம். எவ்வாறிருப்பினும் இந்த எண்ணிக்கை அதிகமாக வேண்டும் என்பது எனது துஆவாகும்.

மேலும் உள்ளூர்வாசிகள் மூலமே இந்த பள்ளிவாசல் நிரம்ப வேண்டும். மேலும் பெரிதாக வேண்டும். நமக்கு உண்மையான மகிழ்ச்சி எப்போது ஏற்படும் என்றால் பாகிஸ்தானிலிருந்து வரக்கூடிய மக்களைக் கொண்டு அல்லாமல் உள்ளூர்வாசிகளின் மூலம் பள்ளிவாசல் நிரம்ப வேண்டும். இந்த எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். ஆனால் இந்த விருப்பமும் இந்தப் பணியும் தப்லீக் செய்யாமல் நிறைவேறாது. ஆக தப்லீக் செய்வதற்கான முயற்சியைச் செய்யுங்கள். துஆவில் அதிகமாக ஈடுபடுங்கள். முயற்சியையும் அதிகமாக்குங்கள். துஆவின் பால் கவனமும் ஏற்பட வேண்டும்.

அல்லாஹ் இந்தப் பள்ளிவாசலை விரைவில் சிறியதாக ஆக்குவானாக! மேலும் பள்ளிவாசல் கட்டப்பட்டுக் கொண்டே செல்ல வேண்டும். இந்த பள்ளிவாசல் இந்தப் பகுதியில் உங்களது முயற்சியின் உச்சம் கிடையாது. மாறாக இது முதல் அடியை எடுத்து வைப்பதாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் பள்ளிவாசல்கள் மூலம் இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் ஏற்படுகிறது என்று கூறியுள்ளார்கள். மக்களுக்கு இஸ்லாத்தின் பால் கவனம் ஏற்படுகிறது. அல்லாஹ் உள்ளூர்வாசிகளுக்கு மிக விரைவில் இதன் பக்கம் கவனம் ஏற்படச் செய்வானாக! இன்சா அல்லாஹ் கவனம் ஏற்படும் என நம்புகிறோம்.

உலகில் எங்கெல்லாம் நமது பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளனவோ அங்கு இஸ்லாத்தைப் பற்றிய அறிமுகம் பல மடங்கு அதிகமாகி உள்ளது. ஆக இந்த வகையிலும் நான் ஏற்கனவே கூறியது போன்று உங்களது பொறுப்புகளை உணருங்கள். இந்த அறிமுகம் மூலம் அக்கம் பக்கத்திலுள்ள மக்களது பார்வை உங்கள் மீது அதிகமாக படும். பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள நீங்கள் அங்கு சுதந்திரமாகப் பள்ளிவாசல்களில் இபாதத்துகளை செய்ய முடியாமல் இருந்தீர்கள். அங்கு சுதந்திரமாக தன்னை முஸ்லிம் என்று கூற முடியாததனால் நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். அங்கு அஹ்மதி தன்னை முஸ்லிம் என்று வெளிப்படுத்த முடியாது. ஆக இந்த நோக்கத்தை அடைவதற்கு முயற்சி செய்து அல்லாஹ்வின் அன்பின் பார்வையைப் பெறக்கூடியவர்களாக ஆகியுள்ளீர்களோ அந்த வகையில் மக்கள் வரை இஸ்லாத்தின் அழகிய போதனையை எட்ட வையுங்கள். உங்களில் பெரும்பான்மையினருக்கு ஏதோவொரு சிறப்பின் காரணத்தால் இங்கு வர வேண்டிய சூழல் ஏற்படவில்லை. மாறாக நான் கூறியது போன்று பாகிஸ்தானில் அஹ்மதிய்யத்திற்கு எதிர்ப்பு இருப்பதன் காரணமாக வந்துள்ளீர்கள்.

ஆக உங்களது சந்ததிகளுக்கும் இதனை உணர வையுங்கள். அல்லாஹ்வின் இந்த கருணைக்கு நன்றி செலுத்துவது நாம் பள்ளிவாசலை நிரப்புவதன் பக்கம் கவனம் செலுத்தும் போதுதான் அதற்குரிய உரிமையைச் செலுத்தக் கூடியவர்களாக ஆகும் போதுதான் தப்லீகின் பக்கம் கவனம் செலுத்தும் போதுதான் நிறைவேற முடியும். அஹ்மதிகள் மீது இன்றும் பாகிஸ்தானில் ஏதாவதொரு வழக்கு ஒவ்வொரு நாளும் தொடுக்கப்படுகிறது. மிகவும் வேடிக்கை நிறைந்த வழக்கும் தொடுக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் நான் கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் ஒன்றில், இரண்டு நபர்கள் சார்பாக ஒரு கிராமத்தில் ஒரு FIR போடப்பட்டுள்ளது. அதில் அவர்கள் நாங்கள் சென்று கொண்டிருந்தோம். ஒரு மினாரா இருந்தது. ஒரு கலசம் தென்பட்டது. அதன் அருகே சென்ற போது இது காதியானிகளின் பள்ளிவாசல் என எங்களுக்கு தெரிய வந்தது. இதனால் எனது உணர்வுகள் காயமடைந்து விட்டன. இவர் தன்னை ஒரு பயணி என்று தொடக்கத்தில் கூறியுள்ளார். பிறகு இந்த பள்ளிவாசலைக் கட்டியவர் யார் என நான்கு நாட்கள் தேடினேன். இறுதியாக இங்கு எட்டு நபர்கள் உள்ளனர். அவர்கள் தான் இங்கு தொழுது வருகிறார்கள். அவர்களிடம் நீங்கள் இந்த மினாராவை உடைத்து விடுங்கள், கலசத்தை உடைத்து விடுங்கள் எனக் கூறினேன். ஆனால் அவர்கள் அதனை கேட்கவில்லை. எனது உணர்வுகள் காயமடைந்து விட்டன. எனவே FIR போடப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஆக இதுதான் பாகிஸ்தானின் நிலையாகும். தற்போது சின்னச்சின்ன கிராமத்திலும் இந்த நிலைமை ஏற்பட ஆரம்பித்துள்ளது. இப்படிப்பட்ட சூழலில் அஹ்மதிகள் அங்கு வசிக்கிறார்கள். உங்களில் சிலரும் இப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்துதான் இங்கு வந்திருக்கின்றீர்கள். எனவே இந்த சூழலை மறந்து விடாதீர்கள். நினைவில் கொள்ளுங்கள். பள்ளிவாசலுக்கான உரிமையைச் செலுத்துங்கள்.

அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**
**HAZRAT KHALIFATUL MASIH V**
at BAIT-UL-MASROOR Mosque, Brisbane, Australia
on **25.10.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456